துரிசில்

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு (குறள் 425)

jnutamil www.jnu.ac.in/scts aayvaram

இதழ்: 2 வெளியீடு: SCTS, JNU 05.05.2025 திருவள்ளுவராண்டு: 2056

நெறியாளுகை
இரா.தாமோதரன் (அறவேந்தன்)

பதிப்பாசிரியர்
இ.சு.அஜய்சுந்தர்

சிறப்புநிலைத் தமிழ்த்துறை,
ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகம்,
புதுதில்லி – 110 067.

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டின் தொன்மை

தமிழ், உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றாகும். 3000 ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கியப் பரப்பையுடையது தமிழ் மொழி. கி.மு. 600 முதல் கி.மு. 300 வரையிலான காலகட்டத்தில் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலான படைப்புகள் வழியாகத் தமிழ் இலக்கியம் செழித்தோங்கியது. கீழடி, ஆதிச்சநல்லூர், பொருந்தல், கொடுமணல், சிவகளை, மயிலாடும்பாறை முதலான தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள், மிகத் தொன்மையான காலத்திலேயே தமிழ்நாடு ஒரு செழிப்பான நகரப் பண்பாட்டைக் கொண்டிருந்ததை உறுதிசெய்துள்ளன. அண்மைக்கால அறிவியல்பூர்வமான தொல்லியல் ஆராய்ச்சிகள், தமிழ் பேசும் பகுதியில், 5,300 ஆண்டுகளுக்கு முன்பு இரும்பின் பயன்பாடு இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளன. பண்டைய தமிழ்நாடு கிரேக்கம், ரோம், சீனா போன்ற பல்வேறு பண்டைய நாகரிகங்களுடன் வணிக உறவுகளைக் கொண்டிருந்தது. இத்தகைய சிறப்புவாய்ந்த தமிழின் இலக்கிய, இலக்கண, பண்பாடு மற்றும் கலை வரலாற்றைப் படிப்பது உலகின் தொன்மையான நாகரிகங்களுள் ஒன்றைப் பற்றி அறிந்துகொள்ள வழிவகுப்பதுடன் அவற்றிலிருந்து எதிர்கால உலகம் பின்பற்றதக்க விழுமியங்களைக் கைக்கொள்வதாகவும் அமையும்.

ஆல் போலச் செழித்து வளர்தல்

2000ஆம் ஆண்டில், புதுதில்லியில் உள்ள ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) மொழி, இலக்கிய, பண்பாட்டுப் புலத்தின் இந்திய மொழிகளுக்கான துறையில் தமிழ் இருக்கையைத் (Tamil Chair) தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிகாரப்பூர்வமாக, 2007 ஆம் ஆண்டு இந்த இருக்கை தனது செயல்பாட்டைத் தொடங்கியது; படிப்படியாக, இது 2008இல் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) மற்றும் முனைவர் பட்டப் (Ph.D.) படிப்புகளை வழங்கும் ஒரு தமிழ்ப் பிரிவாக (Tamil Stream) உருவாக்கப்பட்டது.

15 ஆண்டுகளாக இந்திய மொழிகள் துறையின்கீழ்ச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த தமிழ்ப் பிரிவு, கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் 21 அன்று தமிழக அரசின் 5 கோடி ரூபாய் சிறப்புநிதி நல்கையால் சிறப்புநிலைத் தமிழ்த்துறை எனும் (Special Centre for Tamil Studies) தனியொரு துறையாக உயர்த்தப்பட்டது. ஏற்கனவே உள்ள முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புடன் தற்போது முதுகலைத் தமிழ்ப் படிப்பும் தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. துறையில், தற்போது ஆசிரியர்கள் இருவர் உள்ள நிலையில், துறையை விரிவாக்கம் செய்யும் பணி நிகழ்ந்து வருகிறது.

முனைவர் பட்டப் படிப்பு

பல்கலைக்கழக வளாகத்தின் பன்மொழிச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் பிற உலக மொழிகளுடனும் இந்திய மொழிகளுடனும் ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த ஆய்வுகள் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் இடையிலான இலக்கிய, பண்பாட்டுத் தளங்களிலான உறவுகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. மேலும், தங்களது ஆய்வின் ஒரு பகுதியாகத் துறையின் மாணவர்கள், உலக, இந்திய இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தமிழுக்கு மொழிபெயர்த்து அளித்துவருகிறார்கள். அயல்நாட்டுப் பயணங்களையும் மேற்கொள்கின்றனர்.

முதுகலைப் படிப்பு

கடந்த 2024 முதல் முதுகலைத் தமிழ்ப் படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. முதுகலைப் பாடத்திட்டத்தில் ஒவ்வொரு பாடத்தின் ஐந்தாவது அலகும் ஒப்பீட்டு நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களைப் பிற மொழிகளின் இலக்கிய இலக்கணங்களுடன் ஒப்பிட்டுப் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பை வழங்குகிறது. ஒவ்வொரு பருவத்திலும் மாணவர்கள் தேர்வுசெய்ய வேண்டிய விருப்பப் பாடங்களைப் பிற மொழித்துறைகள் மட்டுமின்றிச் சமூகவியல், அரசியல் அறிவியல், வரலாறு முதலான வேறு துறைகளிலிருந்து தேர்வுசெய்யுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அறக்கட்டளை நிதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதுகலை மாணவர் ஒருவர்க்கு மாதத்திற்கு நான்காயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தமிழ்ப் பிரிவிலிருந்து சிறப்புநிலைத் தமிழ்த்துறையாக மலர்தல்

புதுதில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்குவதற்கு, தமிழ்நாடு அரசு 30.08.2022 அன்று அரசாணையை (எண்:126) நிறைவேற்றி, 5 கோடி ரூபாயை முதற்கட்டமாக ஒதுக்கியது. தொடர்ந்து, 21 திசம்பர் 2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜவகர்லால்நேரு பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் அவர்களிடம் 5 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. வி. இறையன்பு, தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு. இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், ஜேஎன்யு பேராசிரியர்கள் முனைவர் இராம. குமாரசாமி மற்றும் முனைவர் இரா. அறவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

JNU வில் தமிழாய்வு

தமிழ் இருக்கை குறித்த அரசின் அறிவிப்பு	***04 ஏப்ரல் 2000***
தமிழ் இருக்கை தொடக்கம்	***27 பிப்ரவரி 2007***
தமிழ்ப் பிரிவாக வளர்தல்	***ஜனவரி 2008***
சிறப்புநிலைத் தமிழ்த்துறையாக மலர்தல்	***21 மார்ச் 2023***

JNUவில் *2009–2020 வரை 40 ஆய்வாளர்கள் தமிழில் ஆய்வில் நிறைஞர்* (M.Phil.) *பட்டத்தை நிறைவுசெய்துள்ளனர். 2008 முதல் தற்போது வரை 42 ஆய்வாளர்கள் முனைவர் பட்ட ஆய்வை* (Ph.D.) *நிறைவுசெய்துள்ளனர். தற்போது தமிழ்த்துறையில் 13 ஆய்வாளர்கள் முனைவர்பட்ட ஆய்வையும் 5 மாணவர்கள் முதுகலைப் பட்டப்படிப்பையும்* (M.A.) *மேற்கொண்டு வருகின்றனர்.*

சிறப்புநிலைத் தமிழ்த்துறையின் திறப்புவிழா

JNUவின் சமூக அறிவியற் புலத்தின் நான்காம் தளத்தில் சிறப்புநிலைத் தமிழ்த்துறை தொடங்கப்பட்டது. 22 ஏப்ரல் 2024 அன்று நடைபெற்ற திறப்புவிழாவில் மாண்பமை துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் அவர்கள் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றித் துறையின் செயல்பாடுகளைத் தொடங்கிவைத்தார். பல்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் நலம் விரும்பிகளும் பங்குபெற்ற இந்நிகழ்வில் சிறப்புநிலைத் தமிழ்த்துறையினரின் நூல்கள் வெளியிடப்பட்டன.

அயல்நாட்டினரும் சிறப்புநிலைத் தமிழ்த்துறையும்

JNUவின் சிறப்புநிலைத் தமிழ்த்துறை அயல்நாட்டு ஆய்வாளர்களுடன் ஆய்வுசார் உரையாடல்களைப் பல்வேறு வடிவங்களில் நிகழ்த்தி வருகிறது.

பேரா. டிமிட்ரியோஸ் வாசிலியாடிஸ் – 13.12.2022

13 திசம்பர் 2022 அன்று, ஹெலனிக் இந்தியக் கலாச்சார மற்றும் மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவரும், ஏதென்ஸ் இந்தோ – ஹெலனிக் ஆய்வுகள் மையத்தின் இயக்குநரும், ஏதென்ஸ் தேசிய மற்றும் கேபோடிஸ்ட்ரியன் பல்கலைக்கழகத்தில் இந்தி, சமஸ்கிருத ஆசிரியருமான பேராசிரியர் டிமிட்ரியோஸ் வாசிலியாடிஸ், தமிழ்ப் பிரிவுக்கு வருகை தந்தார்.

முனைவர் டாட்டியானா துபியான்ஸ்கயா – 24.11.23

24 நவம்பர் 2023 அன்று, ரஷ்யாவின் மாஸ்கோவிலுள்ள கீழைத்தேய மற்றும் செவ்வியல் ஆய்வு நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் டாட்டியானா துபியான்ஸ்கயா சிறப்புநிலைத் தமிழ்த்துறைக்கு வருகை தந்தார். அவருடன் ‘ரஷ்யாவில் தற்கால இந்திய இலக்கிய ஆய்வுகள்’ என்ற தலைப்பில் அறிவுப் பகிர்வு அமர்வு நிகழ்ந்தது. தமிழ்த்துறையின் ஆய்வு மாணவர் திரு. கமலக்கண்ணன் அப்பேராசிரியரது தந்தையின் நூலைத் தமிழாக்கம் செய்திருந்தார். அம்மொழிபெயர்ப்பின் இறுதி வரைவை அவரிடம் திரு. கமலக்கண்ணன் வழங்கினார்.

பேரா. கிறிஸ்டோஸ் அரம்பாட்சிஸ் – 10.04.24

10 ஏப்ரல் 2024 அன்றைய அறிவுப் பகிர்வு அமர்வில் கிரீஸ் நாட்டின் அரிஸ்டாட்டில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கிறிஸ்டோஸ் அரம்பாட்சிஸ் முதன்மை உரையாளராகக் கலந்துகொண்டார். தமிழ் மற்றும் கிரேக்க நாகரிகங்களுக்கு இடையிலான பண்பாட்டு உறவை எடுத்துக்காட்டும் வகையில் அவர் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். சிறப்புநிலைத் தமிழ்த்துறையின் ஆய்வு மாணவர்களும் பேராசிரியர்களும் பிற துறை மற்றும் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முனைவர் மார்கெரிட்டா ட்ரெண்டோ – 18.07.22

‘Writing Tamil Catholicism’ என்ற தலைப்பிலான நூல் குறித்த மதிப்புரைத் தொடர், 18 சூலை 2022 முதல் 20 சூலை 2022 வரை நிகழ்த்தப்பட்டது. தமிழ்த்துறை ஆய்வாளர் திரு. பு. கமலக்கண்ணன் நூலை மதிப்புரை செய்து உரையாற்றினார். பிரான்சின் பாரிஸில் உள்ள CEIAS-இல் ஆய்வுத் தகைஞராகப் பணியாற்றுபவரும் நூலின் ஆசிரியருமான முனைவர் மார்கெரிட்டா ட்ரெண்டோ உரை நிகழ்த்தினார், அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய மொழிகள் மற்றும் நாகரிகங்கள் துறையின் வருகைதரு பேராசிரியர் இ. அண்ணாமலை இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

01 மார்ச் 2023 அன்று, இணைய வழியாக ON SCREEN OFF SCREEN என்ற நூல் குறித்த கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலை, வரலாறு மற்றும் நுண்கலைத் துறையின் மூத்த விரிவுரையாளர் திரு. பாக்யநாதன் அகிலன் நூலை மதிப்புரை செய்தார். சிகாகோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியரும் நூலின் ஆசிரியருமான கான்ஸ்டன்டைன் நகாசிஸ் உரையாற்றினார். தொடர்ந்து, அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய மொழிகள் மற்றும் பண்பாட்டுத் துறையின் பேராசிரியர் முனைவர் ந. கோவிந்தராஜன், “பிம்பங்களின் மாய வலை: நகாசிஸின் நூல் பற்றிய சில விவாதக் குறிப்புகள்” என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் மற்றும் ஊடகத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன், சினிமா வரலாறு மற்றும் கோட்பாடுகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பேரா. கான்ஸ்டன்டைன் நகாசிஸ்

பேரா. ஜார்ஜ் ஹார்ட் 27.09.22

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் மேனாள் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட்டின் 80வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், ‘தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுக்குப் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட்டின் பங்களிப்பு’ எனும் தலைப்பில் இணையவழி உரையமர்வு 27 – 28 செப்டம்பர் 2022 ஆகிய நாட்களில் நிகழ்த்தப்பட்டது. கருத்தரங்கின் முதல் நாளில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஜெயதேவன், மணற்கேணி ஆய்விதழின் ஆசிரியர் முனைவர் துரை. ரவிக்குமார், அமெரிக்காவின் செவண்டிசு நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுத்துறைப் பேராசிரியர் வாசு அரங்கநாதன், ‘ஜார்ஜ் ஹார்ட்டின் பங்களிப்புகளும் தமிழர்களின் பெருமையும்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். கருத்தரங்கின் இரண்டாம் நாளில், சிகாகோ பல்கலைக்கழகத்தின் மேனாள் பேராசிரியர் இ. அண்ணாமலை, தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் ம. இராசேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அமெரிக்காவின் ரோட் தீவில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, ‘தெலுங்கு இலக்கியம்: சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடையில்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

கவிஞர் கிரிஷாந்

இலங்கைக் கவிஞர் கிரிஷாந்தின் ‘சிதறுண்ட நிலத்தின் சொற்கள்: ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் பற்றிய உரை’ என்ற தலைப்பில் 08 பிப்ரவரி 2023 அன்று சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

முனைவர் ஜஸ்டின் ஹென்றி

20 ஜூன் 2023 அன்று, ‘இலங்கை இராமாயண மரபு: சிங்கள, தமிழ் இலக்கியம் மற்றும் நாட்டுப் புறவியலின் இடைத்தளம்’ என்ற தலைப்பில் தெற்குப் புளோரிடா பல்கலைக் கழகத்தின் சமய ஆய்வுத்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஜஸ்டின் ஹென்றி, தமிழ்த்துறை நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் உரையாற்றினார்.

சிகாகோ பல்கலைக்கழகத் தெற்காசிய மொழிகள், நாகரிகங்கள் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஆண்ட்ரு ஓலெட், ‘பிராகிருத இலக்கியக் கோட்பாடுகள்’ என்ற தலைப்பில் 06 மார்ச் 2023 அன்று தமிழ்த்துறை நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் உரையாற்றினார்.

முனைவர் ஆண்ட்ரு ஓலெட் 06.03.23

8 ஜூலை 2024 அன்று சிறப்புநிலைத் தமிழ்த்துறைக்குத் திரு. அவேடிஸ் ஹாட்ஜியன் வருகை தந்தார். திரு. ஹாட்ஜியன் வெனிஸில் ஒரு புகழ்பெற்ற பத்திரிகையாளரும் எழுத்தாளரும் ஆவார். சிறப்புநிலைத் தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் அறவேந்தனுடன், முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. தமிழ்பரதன், தனது ஓலைச்சுவடிக் கண்டுபிடிப்பு குறித்த அறிக்கையை அவருக்கு வழங்கினார்.

திரு. அவேடிஸ் ஹாட்ஜியன்

ஆய்வாளர் திரு. பு. கமலக்கண்ணன், கனடா நாட்டு மானுடவியல் பேராசிரியர் பெரண்டா பெக் அவர்களை, அவர்களது திருப்பூர் இல்லத்தில் சந்தித்தார். 1960களில் தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் வந்து தங்கி, முறைப்படி தமிழ் கற்று, அண்ணன்மார் கதை குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர்பட்டம் பெற்றவர் பெரண்டா பெக். 1958 துவங்கி தற்போதுவரை தொடர்ந்து ஆய்வு செய்தும் எழுதியும் வருகிறார். அவருடனான உரையாடலின்வழிப் பல்வேறு தகவல்களை அறிந்துகொண்டார் கமலக்கண்ணன்.

திருமிகு பெரண்டா பெக்

18 நவம்பர் 2023 அன்று, புகழ்பெற்ற ரஷ்யத் தமிழறிஞரான பேராசிரியர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கியின் நினைவுச் சொற்பொழிவைத் தமிழ்த்துறை நிகழ்த்தியது. JNU ரஷ்ய ஆய்வுத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் சோனு சைனி வாழ்த்துரை வழங்கினார். ரஷ்யாவின் மாஸ்கோவிலுள்ள கீழைத்தேய மற்றும் செவ்வியல் ஆய்வு நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் டாடியானா துபியான்ஸ்கயா, ‘தமிழ், தமிழ்நாட்டுடனான பேராசிரியர் துபியான்ஸ்கியின் உறவுநிலை’ என்ற தலைப்பில் உரையாற்றினார். ஹாம்பர்க் பல்கலைக்கழக ஆய்வுத் தகைஞர் முனைவர் நிகோலாய் கார்டிச்சுக் ‘பேராசிரியர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கியும் ரஷ்யாவில் தமிழ் ஆய்வுகளும்’ என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழ்த்துறை ஆய்வாளர் திரு. பு. கமலக்கண்ணன் பேராசிரியர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கியின் ‘பண்டைய தமிழ்க் கவிதையின் சடங்கியல் தொன்மவியல் மூலங்கள்’ என்ற நூலை மதிப்புரை செய்தார்.

திருமிகு நிகோலாய் கார்டிச்சுக்

01 ஏப்ரல் 2025 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த கலந்துரையாடல் அமர்வில் இந்தோ கிரேக்க இசை ஆய்வாளர் திரு. கொன்ஸ்டான்டினோஸ் கலைட்சிஸ் மாணவர்களுடன் உரையாடினார். சில பாடல்கள் பாடியதோடு தமிழ் இசை, இந்திய இசை, கிரேக்க இசைதொடர்பான பல்வேறு கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

‘தமிழ் இசையும் கிரேக்க இசையும் அவற்றின் ஒலிகளாலும் தோற்றங்களாலும் வேறுபட்டிருக்கலாம். எனினும், அவற்றின் பண்பாட்டு வெளிப்பாடு, கதைசொல்லல் முறை, ஆழமான உள உணர்ச்சி முதலியவை பொதுத்தன்மையில் உள்ளன. இரு மரபுகளும் எல்லைகளைக் கடந்து உலகளாவிய இசைமொழி மூலம் மக்களை ஒன்றிணைக்கும் வல்லமையைக் கொண்டுள்ளன’ எனத் தெரிவித்தார்.



திருமிகு கொன்ஸ்டான்டினோஸ் கலைட்சிஸ்

தமிழ்த்துறையும் 2025ஆம் ஆண்டின் சாகித்திய அகாதெமி விருதாளர்களும்

ஜேஎன்யு வரலாற்றுத் துறையின் மேனாள் ஆய்வாளர் பேரா. ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கு 2024ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 11 மார்ச் 2025 அன்று நடைபெற்ற நிகழ்வில் அவர் சிறப்புநிலைத் தமிழ்த்துறை ஒருங்கிணைத்த உரையமர்வில் 'வ.உ.சியைத் தேடி' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

விருது பெற்ற நூல்

பேரா. ஆ.இரா. வேங்கடாசலபதி

ஜேஎன்யு தமிழ்த்துறையின் மேனாள் ஆய்வாளர் முனைவர் விமலா அவர்கள் மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த **எனது ஆண்கள்** எனும் நூல் 2025ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருதுக்குத் தேர்வாகியுள்ளது. தங்கள் ஆய்வுக்காக வெவ்வேறு மொழிகளைப் பயிலும் தமிழ்த்துறை மாணவர்களுக்கு இது ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்தது.

பரிசு பெற்ற நூல்

திருமிகு ப.விமலா

சிறப்புநிலைத் தமிழ்த்துறையில் சாகித்திய அகாதெமி விருதாளர்கள் சந்திப்பு

15–03–2023

13–03–2024

சாகித்திய அகாதெமி விருதாளர்கள் கவிஞர் வைரமுத்து, எழுத்தாளர் இமையம் ஆகியோர் JNUவைப் பார்வையிட்டனர். இருவருக்கும், JNUவின் மாண்புமிகு துணைவேந்தர் நினைவுப் பரிசு வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

JNUவின் சிறப்புநிலைத் தமிழ்த்துறை, 09 நவம்பர் 23 அன்று நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் சாகித்திய அகாதெமி பால புரஸ்கார் விருதாளர் திரு. உதயசங்கர் அவர்கள் ‘தமிழ்ச் சிறார் இலக்கியத்தின் சமகாலப் போக்குகள்’ எனும் தலைப்பில் உரையாற்றினார்.

18.03.2024 அன்று, 2023ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் தேவிபாரதி அவர்கள் தனது படைப்புகளுக்கான பின்புலம் குறித்துப் பகிர்ந்துகொண்டார்.

திருமிகு உதயசங்கர்

திருமிகு தேவிபாரதி

சாகித்திய அகாதெமி உரையாளர்கள் 2024

ஆண்டுதோறும் மார்ச் மாதம் சாகித்திய அகாதெமி ஒருங்கிணைக்கும் இலக்கியத் திருவிழாவிற்கு வருகைதரும் தமிழ் எழுத்தாளர்களுடன் தமிழ்த்துறை மாணவர்கள் கலந்துரையாடும் விதமாக உரையமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. 2024ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட அமர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:

- *13.03.2024 அன்று நடைபெற்ற அமர்வில் எழுத்தாளர் இமையம் அவர்களது நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து பேராசிரியர்கள் ஜி.ஜே.வி. பிரசாத் (மொழிபெயர்ப்பாளர்) மற்றும் ஷோபா சிவசங்கரன், திரு. ஸ்ரீதரன்பாலன் (வெளியீட்டாளர்) ஆகியோர் உரையாற்றினர்.*
- *13.03.2024 அன்று நடைபெற்ற அடுத்த அமர்வில் எழுத்தாளர் ஜோ டி குரூஸ் அவர்கள் உரையாற்றினார்.*
- *16.03.2024 அன்று நடைபெற்ற அமர்வில் 'இலக்கியத்தின் வழி தலித் பண்பாட்டு அரசியல்' எனும் தலைப்பில் எழுத்தாளர் சிவகாமி ஐ.ஏ.எஸ் அவர்கள் உரையாற்றினார்.*
- *எழுத்தாளர் வேல்முருகன் இளங்கோ அவர்கள், 'மொழி – இலக்கியம் – பேருண்மைகள்' என்ற தலைப்பில் 14 மார்ச் 2024 அன்று JNU தமிழ்த்துறையில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.*
- *பிற எழுத்தாளர்களுடன் சாகித்திய அகாதெமி வளாகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.*

திருமிகு வேல்முருகன் இளங்கோ

திருமிகு ஜோ டி குரூஸ்

திருமிகு சிவகாமி இஆப

திருமிகு சுனில் கிருஷ்ணன்

திருமிகு பாரதிபாலன்

திருமிகு கோ.ம.கோ. இளங்கோ

திருமிகு சரவண மணிகண்டன்

திருமிகு வாசந்தி

சாகித்திய அகாதெமி உரையாளர்கள் 2025

2025ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட அமர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:

நாள்	உரையாளர்	தலைப்பு
04 மார்ச் 2025	ப. சிவகாமி	இனி வரும் இலக்கியம்
08 மார்ச் 2025	பொன். சக்திவேல்	மாற்றுத்திறனாளர் இதழியல்
09 மார்ச் 2025	நி. கனகராசு	தமிழ் – ஜப்பானியக் கவிதையியல்
10 மார்ச் 2025	வினையன்	தற்காலக் கவிதைகளின் போக்கு
11 மார்ச் 2025	மு. இரமேஷ்	மாற்றுத்திறனாளர் படைப்புகளின் அண்மைக்காலப் போக்குகள்
11 மார்ச் 2025	விஜயராணி	கலந்துரையாடல்
12 மார்ச் 2025	இமையம்	இமையத்தின் படைப்புகள்: மொழியாக்கச் சிக்கல்களும் அனுபவங்களும்
12 மார்ச் 2025	தமிழவன்	கலந்துரையாடல்


திருமிகு பொன். சக்திவேல்

திருமிகு நி. கனகராசு

திருமிகு ப. சிவகாமி இ.ஆ.ப.

திருமிகு வினையனுடன் மாணவர்கள்

திருமிகு மு. இரமேஷ்

திருமிகு இமையமும் அவரது படைப்புகளின் மொழிபெயர்ப்பாளர்களும்

திருமிகு விஜயராணி இ..ஆ.ப.

திருமிகு தமிழவனுடன் மாணவர்கள்

நூல் வெளியீடு

JNU சிறப்புநிலைத் தமிழ்த்துறையும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து ஒருங்கிணைத்த சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டடத்தில் 18 மார்ச் 2025 அன்று நடைபெற்றது. மாண்புமிகு மக்களவை உறுப்பினர் முனைவர் தொல். திருமாவளவன் அவர்களும் மாண்புமிகு துணைவேந்தர் பேரா. சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் அவர்களும் நூல்களை வெளியிட்டனர். மாண்புமிகு மக்களவை உறுப்பினர் முனைவர் துரை. ரவிக்குமார் அவர்களும் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களும் நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

முனைவர் தொல். திருமாவளவன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்குதல்

முனைவர் துரை. ரவிக்குமார் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்குதல்

திருமிகு அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களுக்குச் சிறப்புச் செய்தல்

சிறப்பு விருந்தினர்களுடன் நூல்களின் ஆசிரியர்கள்

JNUவில் பாரதியார் பிறந்தநாள் விழா

பிற மொழியினர்க்குத் தமிழர்களின் பெருமைகளை எடுத்துச் செல்லும் நோக்கோடு 2022ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பல்கலைக்கழக வளாகத்தில் பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

2022 திசம்பர் 12 முதல் 16 வரை தமிழ் பண்பாடு மற்றும் இந்திய மொழிகள் வாரம் கொண்டாடப்பட்டது. அறிஞர்கள் தமிழ்நாடு மற்றும் தமிழியல் சார்ந்த பல்வேறு தலைப்புகளில் சிறப்புரை வழங்கினர். 14 திசம்பர் 2022 அன்று, மாண்புமிகு தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரியின் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் மருத்துவர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அந்நிகழ்வில் JNUவின் துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் தலைமையுரை நிகழ்த்தினார். திசம்பர் 12 அன்றைய அமர்வில் எழுத்தாளர் தேன்மொழி அவர்கள் உரையாற்றினார்.

திருமிகு தேன்மொழி

திருமிகு தமிழிசை சௌந்தரராஜன்

திருமிகு ஸ்ரீதரன் மதுசூதனன், திருமிகு மாலன் உள்ளிட்டோர்

JNU தமிழ்த்துறை, 11 திசம்பர் 2023 அன்று பாரதியார் பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் இந்திய மொழிகள் தினத்தையும் ஒருங்கிணைத்தது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் மாண்புமிகு மேனாள் நீதியரசர் எம்.ராமசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் திரு. இரா. வெங்கடரமணி வாழ்த்துரை நிகழ்த்தினார். JNUவின் துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ டி பண்டிட் தலைமையுரை நிகழ்த்தினார்.

திருமிகு எம். ராமசுப்பிரமணியன், திருமிகு இரா. வெங்கடரமணி உள்ளிட்டோர்

JNU தமிழ்த்துறை, 12 திசம்பர் 2024 அன்று பாரதியார் பிறந்தநாள் விழாவை நிகழ்த்தியது. மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ டி பண்டிட் தலைமையுரை நிகழ்த்திய இந்நிகழ்வில், மாண்பமை பாராளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். பாரதியாரின் பாடல்களைப் பாடிக் காட்டி அவரது சிறப்புகளை எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர்க்கு JNU தமிழ்ப்பிரிவின் மேனாள் பேராசிரியர்கள் மொழிபெயர்த்த தொல்காப்பிய இந்தி மொழிபெயர்ப்பு நூல் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

❄

JNUவிற்கு வருகை தந்து நிகழ்வில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு திருச்சி சிவா அவர்களுடன் தமிழ்த்துறை மாணவர்கள் குழுநிழற்படம் எடுத்துக்கொண்டனர்.

❄

ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு அறக்கட்டளை

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தினரால் ஜேஎன்யுவில் ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. அதன்வழி ஆண்டுதோறும் அவரது பிறந்தநாளில் நினைவுச் சொற்பொழிவு ஒன்று தமிழ்த்துறையில் நிகழ்த்தப்பட்டுவருகிறது. மேலும், ஆண்டுதோறும் முதுகலை மாணவர் ஒருவர்க்கு மாதம் 4000 வீதம் உதவித்தொகையும் அளிக்கப்படுகிறது. நடப்புக் கல்வியாண்டிற்கான உதவித்தொகை முதுகலை முதலாமாண்டு மாணவர் விக்னேஷ்க்கு வழங்கப்படுகிறது.



முதலாம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவில் பேரா. கே. பாரதி அவர்களுடன் ராஜம் கிருஷ்ணன் குடும்ப உறுப்பினர் பேரா. ரோகிணி முத்துசாமி



மாணவர் தி. விக்னேஷ்க்கு மாண்பமை நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு திருச்சி சிவா உதவித்தொகைக்கான அலுவல் ஆணையை வழங்குதல்

கருத்தரங்குகள்

JNU தமிழ்ப்பிரிவு, 1, 2 செப்டம்பர் 2022 ஆகிய நாட்களில் தொல்காப்பியத்தின் இந்தி மொழிபெயர்ப்புக் குறித்த தேசிய உரையரங்கம் ஒன்றை நிகழ்த்தியது. பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள், அறிஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் தொல்காப்பியத்தின் 27 இயல்கள் குறித்துத் தங்கள் கட்டுரைகளை வழங்கினர்.

சிறப்புநிலைத் தமிழ்த்துறை, JNUவின் மொழிகள் புலத்துடன் இணைந்து ‘இந்திய மற்றும் அயல்நாட்டு மொழிகளின் ஆய்வுகளில் தற்காலப் போக்குகள்’ எனும் தலைப்பில் 2024 பிப்ரவரி 29, மார்ச் 1 ஆகிய இருநாள் கருத்தரங்கத்தை நிகழ்த்தியது. இதில் சிறப்புநிலைத் தமிழ்த்துறையின் மாணவர்கள் மட்டுமல்லாது பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்தும் மாணவர்கள் பங்குபெற்றுக் கட்டுரையைப் பணித்தனர்.

சிறப்புநிலைத் தமிழ்த்துறை 30 செப்டம்பர் 2024 அன்று, சாகித்திய அகாதெமியுடன் இணைந்து உலக மொழிபெயர்ப்பு நாள் இலக்கிய அரங்கை ஒருங்கிணைத்தது. ‘இலக்கிய மொழிபெயர்ப்பும் மொழிபெயர்ப்பாளரின் பட்டறிவும்’ எனும் தலைப்பில் நிகழ்ந்த அமர்வில் எழுத்தாளர் வாஸந்தி தலைமையுரை ஆற்றினார். தொடர்ந்து, வெவ்வேறு மொழியிலிருந்து மொழிபெயர்த்து வரும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் தங்கள் மொழிபெயர்ப்புப் பட்டறிவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

திருமிகு வாஸந்தி

கடந்த 2024 நவம்பர் 11 அன்று நிகழ்ந்த அறக்கட்டளைச் சொற்பொழிவில் ராஜம் கிருஷ்ணனின் குடும்ப உறுப்பினரும் JNU உயிர் அறிவியல் புலப் பேராசிரியருமான ரோகிணி முத்துசுவாமி வாழ்த்துரை வழங்க, ராஜம் கிருஷ்ணனுடன் இணைந்து களப்பணி மேற்கொண்ட முனைவர் ஜி.கே. பாரதி அவர்கள், ‘கள ஆய்வுப் படைப்பாளி ராஜம்கிருஷ்ணன்’ எனும் தலைப்பில் மையவுரை ஆற்றினார்.

இணையவழி உரையமர்வுகள்

JNU தமிழ்த்துறை இணையவழியாகப் பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்தி வருகிறது. தமிழுக்கு முதன்மையான பங்களிப்பைச் செய்த அறிஞர்களின் பணிகள் குறித்த உரையமர்வுகளையும் முதன்மையான நூல்களின் மீதான மதிப்புரை அமர்வுகளையும் நிகழ்த்தி வருகிறது.

'தமிழ் வினைச்சொற்கள் பற்றிய ஆய்வுகள்' என்ற தலைப்பில் மாதத்திற்கு ஒரு நூல் என்ற வகையில் இணையவழி நூல் மதிப்புரைத் தொடரைச் சிறப்புநிலைத் தமிழ்த்துறை நிகழ்த்தியது. சென்னை, தமிழ் இந்தோ–ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் மென்பொருள் பொறியாளர் முனைவர் தி. மோகன்ராஜ் நூல்களை மதிப்புரை செய்தார். ஏழு நூல்களின் ஆசிரியர்களும் அமர்வுகளில் பங்கேற்று மதிப்பாய்வு பற்றிய தங்கள் கருத்துக்களை வழங்கினர். விவரங்கள் பின்வருமாறு:

நூல்	ஆசிரியர்	
Tamil Verbal suffixes	எச். சித்திரபுத்திரன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தலைவர், அகராதியியல் துறை.	*25.07.2022*
Dynamics of Verbal extension in Tamil	பேராசிரியர் இ. அண்ணாமலை, அமெரிக்கா சிகாகோ பல்கலைக்கழக வருகைதரு பேராசிரியர்.	*27.08.2022*
சங்க இலக்கியத்தில் குறிப்பு வினைகள்	பேராசிரியர் சு. அழகேசன், மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.	*24.09.2022*
Dynamics of Tamil Finite system	பேராசிரியர் இரா. கோதண்டராமன், மேனாள் இயக்குநர், புதுச்சேரி மொழியியல் கலாச்சார ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.	*29.10.2022*
பழந்தமிழ் வடிவங்கள் மீள்பார்வை	பேராசிரியர் ச. சுபாஷ் சந்திர போஸ், மேனாள் பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.	*26.11.2022*
Syntax and semantics of Tamil verbs	பேராசிரியர் எஸ். ராஜேந்திரன், மொழியியல் பேராசிரியர், அமிர்தாப் பல்கலைக்கழகம், கோவை.	*26.12.2022*
தமிழில் வினையெச்சங்கள் (ஒரு வரலாற்றாய்வு)	திரு. பெ. மாதையன், மேனாள் தலைவர், தமிழ்த் துறை, பெரியார் பல்கலைக்கழகம்.	*28.01.2023*



துணைவேந்தர் நூலை வெளியிடுதல்

'தமிழியலுக்கு எழுத்தாளர் ரவிக்குமார் அவர்களின் பங்களிப்பு' எனும் தலைப்பில் *2022* சூலை *04* முதல் *06* வரை இணையவழி உரைத்தொடரைத் தமிழ்த்துறை நிகழ்த்தியது. 'ரவிக்குமார் கட்டமைக்கும் பண்பாட்டு மூலதனம்' எனும் தலைப்பில் முனைவர் தேன்மொழியும் 'உலகச் சிந்தனையும் உள்ளூர்ப் பொதுமன்றமும்: ரவிக்குமாரின் அளப்பரிய பங்களிப்பு' எனும் தலைப்பில் பேரா. ராஜன்குறையும் 'எழுத்தாளர் ரவிக்குமாரின் முனைவர்பட்ட ஆய்வும் ஆய்வுநெறிமுறைகளும்' எனும் தலைப்பில் பேரா. சிலம்பு நா. செல்வராசும் 'பத்திராதிபர் ரவிக்குமார்' எனும் தலைப்பில் முனைவர் ஜெ. பாலசுப்பிரமணியமும், 'ஈழத்து அரசியல் இலக்கியத்தில் ரவிக்குமாரின் வகிபாகம்' எனும் தலைப்பில் முனைவர் செல்லத்துரை சுதர்சனும் 'எழுத்தாளர் ரவிக்குமாரின் மொழிக்கருவிகள்' எனும் தலைப்பில் முனைவர் பெ. செல்வகுமாரும் உரையாற்றினர். மாண்பமை துணைவேந்தர் சாந்திஸ்ரீ டி பண்டிட் அவர்கள் கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.



பேரா. இரா. கோதண்டராமன்

‘தமிழியலுக்குப் பேராசிரியர் ந. குமாரசாமி ராஜாவின் பங்களிப்பு’ என்ற தலைப்பில் 2023 சூன் 02 முதல் 04 வரை சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணையவழி உரையமர்வு ஒன்றை நிகழ்த்தியது. சென்னை, தமிழ் இந்தோ–ஐரோப்பிய ஒப்பீட்டு வேர்ச்சொல் அகராதித் திட்டத்தில் மென்பொருள் பொறியாளர் முனைவர் தி. மோகன்ராஜ், பேராசிரியர் ந. குமாரசாமி ராஜாவின் NPP கோட்பாட்டை அறிமுகப்படுத்தி விளக்கினார். மூத்த மொழியியல் ஆய்வாளர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் மூன்று நாட்களும் நிகழ்வில் கலந்துகொண்டு, பேராசிரியர் ந. குமாரசாமி ராஜாவின் பங்களிப்புக் குறித்துத் தனது கருத்துக்களை எடுத்துரைத்து அவரது கோட்பாட்டின் இன்றியமையாமையை விளக்கினார்.

முனைவர் தி.மோகன்ராஜ்

தமிழின் முதன்மையான மொழி யியலாளர் மற்றும் இலக்கண ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான பேராசிரியர் சு. இராசாராம் தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்புகள் குறித்த இணையவழி உரையமர்வை 2023 நவம்பர் 06 முதல் 08 வரை சிறப்புநிலைத் தமிழ்த்துறை நிகழ்த்தியது. பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு உரையாளர்கள், பேராசிரியர் சு. இராசாராம் அவர்களின் பன்முகப் பங்களிப்புகள் குறித்து உரை நிகழ்த்தினர். மூன்று நாட்களும் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் இறுதி நாளில் உரைகள் குறித்த தனது ஏற்புரையை வழங்கினார். JNUவின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ டி பண்டிட் முதல் நாளில் தலைமையுரை நிகழ்த்தினார். இந்த உரையமர்வின் கட்டுரைகளைத் தமிழ்த்துறையின் ஆய்வாளர்கள் திரு. இ.சு. அஜய்சுந்தர் மற்றும் திரு. வ.ஏ. மணிகண்டன் ஆகியோர் ‘சு.இராசாராம் எனும் மீ இலக்கணர்’ என்ற தலைப்பில் பேராசிரியர் அறவேந்தன் அவர்களின் நெறியாளுகையில் நூலாக்கம் செய்துள்ளனர்.

துணைவேந்தர் நூலை வெளியிடுதல்

இலங்கையைச் சார்ந்த பேராசிரியர்கள் அருணாசலம் சண்முகதாஸ் மற்றும் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்புக் குறித்த இணையவழி உரையமர்வை 2024 ஜனவரி 29 முதல் 31 வரை சிறப்புநிலைத் தமிழ்த்துறை நிகழ்த்தியது. பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு உரையாளர்கள், தமிழ்–ஜப்பான் பண்பாட்டு உறவு, இலக்கணம், ஈழத்து ஆய்வுகள் போன்றவற்றில் அவர்களது பங்களிப்புகள்

ஈழத்து மின்னல்கள் நூல் வெளியீடு

குறித்து உரைகளை நிகழ்த்தினர். இருவரும் மூன்று நாட்களும் நிகழ்வில் கலந்துகொண்டு இறுதிநாளில் உரைகள் குறித்த தங்களது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். JNUவின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ டி பண்டிட், முதல் நாளில் தலைமையுரையாற்றிக் கட்டுரைக் கோவையை வெளியிட்டார்கள். தொடர்ந்து, 05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் ஆய்வாளர் இ.சு. அஜய்சுந்தரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 'ஈழத்து மின்னல்கள்' எனும் தலைப்பில் நூலாக அக்கோவை வெளியிடப்பட்டது.

இந்தியவியல் முன்னோடி நூல் வெளியீடு

பேராசிரியர் அர. விஜயலட்சுமியின் தமிழியல் பங்களிப்புக் குறித்த இணையவழி உரையமர்வை 2024 ஏப்ரல் 22 முதல் 24 வரை தமிழ்த்துறை நிகழ்த்தியது. உலகெங்கிலும் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு உரையாளர்கள், வெளிநாட்டு அறிஞர்களுக்குத் தமிழ் நூல்களைக் கற்பிக்கும்போது பேராசிரியர் கையாண்ட கற்பித்தல் முறைகள் குறித்தும் அவரது ஆய்வுச் சிறப்புகள் குறித்தும் உரை நிகழ்த்தினர். மூன்று நாட்களும் நிகழ்வில் கலந்துகொண்ட அவர் இறுதி நாள் அன்று உரைகள் குறித்த தனது கருத்துக்களைத் தெரிவித்தார். JNUவின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ டி பண்டிட் முதல் நாளில் தலைமையுரையாற்றிக் கட்டுரைக் கோவையை வெளியிட்டார்கள். தொடர்ந்து, 05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் ஆய்வாளர் இ. சு. அஜய்சுந்தரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 'இந்தியவியல் முன்னோடி' எனும் தலைப்பில் நூலாக அக்கோவை வெளியிடப்பட்டது.

சிறப்புநிலைத் தமிழ்த்துறை 2024 மார்ச் 28 அன்று இணையவழி நூல் மதிப்புரை நிகழ்வை நிகழ்த்தியது. 2023–ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருதுபெற்ற 'கருங்குன்றம்' எனும் மொழிபெயர்ப்பு நாவல் குறித்துத் தமிழ் எழுத்தாளர் தஞ்சாவூர் கவிராயர் மதிப்புரை ஆற்றினார். விருதுபெற்ற நூலின் மொழிபெயர்ப்பாளரான கண்ணையன் தட்சிணா மூர்த்தியும் நாவலை மொழிபெயர்த்தது குறித்த தனது கருத்துக்களை நிகழ்வில் பகிர்ந்துகொண்டார்.

திருமிகு தஞ்சாவூர் கவிராயர்

JNUவின் தமிழ்த்துறை, தமிழியலுக்குப் பேராசிரியர் தமிழவனின் பங்களிப்புக் குறித்த மூன்று நாள் இணையவழி உரைத்தொடரைத் திசம்பர் 16 முதல் 18 வரை நிகழ்த்தியது. பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு உரையாளர்கள் கலந்துகொண்டு பேராசிரியரின் சிறப்புகளை எடுத்துரைத்தனர். தொடர்ந்து, 05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் கருத்தரங்கின் கட்டுரைகள் அடங்கிய ஆய்வாளர் கா. விக்னேஷ் பதிப்பித்த, 'கோட்பாடு திறனாய்வு திறனாய்வாளர்' எனும் தலைப்பிலமைந்த நூலைத் துணைவேந்தர் சாந்திஸ்ரீ டி பண்டிட் அவர்கள் வெளியிட்டார்கள்.

கோட்பாடு திறனாய்வு திறனாய்வாளர் நூல் வெளியீடு

தமிழ்த்துறை நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவுகள்

JNUவின் சிறப்புநிலைத் தமிழ்த்துறை, மாணவர்கள் பரந்துபட்ட அறிவை வளர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறு பொருண்மைகளிலான சொற்பொழிவு அமர்வுகளையும் நிகழ்த்தி வருகிறது.

திருமிகு எஸ்.குருமூர்த்தி

21 மற்றும் 22 செப்டம்பர் 2023 ஆகிய நாட்களில் தமிழ்த்துறை ஒருங்கிணைத்த சிறப்புச் சொற்பொழிவில் 'சோழர்களின் அறியப்படாத கோயில்கள்' மற்றும் 'பல்லவர்கள் முதல் விஜயநகரப் பேரரசு வரையிலான சிற்பக்கலையின் வளர்ச்சி' என்ற தலைப்புகளில் திரு. எஸ். குருமூர்த்தி (பாரம்பரிய ஆர்வலர், கோயம்புத்தூர்) உரையாற்றினார்.

24 நவம்பர் 2023 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த சிறப்புச் சொற்பொழிவில் 'பரிபாடலில் இசைக் கூறுகள்' என்ற தலைப்பில் இசைத்தமிழ் ஆய்வாளர் முனைவர் சிவராமன் அவர்கள் உரையாற்றினார். திருச்சி கலைக்காவேரி நுண்கலை கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. பிரசன்ன குமாரி இசை விளக்கத்தை வழங்கினார்.

முனைவர் சிவராமன்
முனைவர் இரா. பிரசன்ன குமாரி

எழுத்தாளர் மருதன்

14 பிப்ரவரி 2024 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த உரையமர்வில் எழுத்தாளர் மருதன் 'கற்பனையிலிருந்து உண்மைக்கு' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். காலந்தோறும் இந்தியாவின் வரலாற்றெழுதியல் குறித்தும் அவற்றிலுள்ள பல்வேறு சிக்கல்களையும் எடுத்துரைத்தார். கலந்துரையாடலின்போது மாணவர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

17 மே 2024 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த நிகழ்வில், ஆஸ்திரேலிய உச்சநீதிமன்ற வழக்குரைஞர் முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன், ‘திருக்குறளும் ஐ.நா. அவையும்’ எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

திருமிகு சந்திரிகா சுப்ரமணியன்

திருமிகு பா. வெங்கடேசன்

06 நவம்பர் 2024 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த உரையமர்வில் ‘மெய்மையிலிருந்து புனைவு மெய்மைக்கு’ எனும் தலைப்பில் எழுத்தாளர் திருமிகு பா. வெங்கடேசன் அவர்கள் உரையாற்றினார். மாய யதார்த்தவாதப் படைப்புகள் குறித்து மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் கலந்துரையாடலில் அவர் பதிலளித்தார்.

22 ஜனவரி 2025 அன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த உரையமர்வில் எழுத்தாளர் திருமிகு வெண்ணிலா அவர்கள் ‘வரலாற்று நாவல்களில் புனைவுக் கதாபாத்திரங்கள்’ எனும் தலைப்பில் உரையாற்றினார்.

திருமிகு அ. வெண்ணிலா

28 ஏப்ரல் 2025 அன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைமேனாள் தலைவர் பேரா. அ. ராமசாமி, தமிழ்த்துறை நிகழ்த்திய உரையமர்வில் ‘உலகத் தமிழிலக்கிய வரைபடம்’ எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

பேரா. அ. ராமசாமி

07 அக்டோபர் 2024 அன்று தமிழ்த்துறை நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் முனைவர் மீனாட்சி சுப்ரமணியம் அவர்கள் A New Approach of understanding Rhythm in Indian Music எனும் தனது நூல் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார். பாரதியார், இரயிம்மன் தம்பி, துளசிதாசர் ஆகியோரின் பாடல்களைப் பாடி அவற்றின் சந்த அமைப்புகளில் உள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டுக் காட்டினார்.

திருமிகு மீனாட்சி சுப்ரமணியன்

5 மார்ச் 2025 அன்று தமிழ்த்துறையில் நடைபெற்ற சொற்பொழிவு அமர்வுகளில் ரோஜா முத்தையா நூலக இயக்குநர் சுந்தர், எழுத்தாளர் இந்திரன், பேராசிரியர் பக்தவத்சல பாரதி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திருமிகு சுந்தர்

திருமிகு பக்தவத்சல பாரதி



திருமிகு இந்திரன்

சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா ஜேஎன்யுவில் நிகழ்ந்தது. அதற்கு முந்தைய நாள் (15 மார்ச்) தமிழ்த்துறையில் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு அமர்வுகளில் உரைவேறுபாட்டுக் களஞ்சியத்தின் ஆசிரியர்கள் க. பாலாஜி (நற்றிணை), ம. லோகேஸ்வரன் (ஐங்குறுநூறு, பரிபாடல்), மா. பரமசிவன் (அகநானூறு), மு. முனீஸ்மூர்த்தி (கலித்தொகை, மலைபடுகடாம்) ஆகியோர் சங்க இலக்கிய உரைகள் தொடர்பான ஆய்வுகளில் எத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றன என்பதை மாணவர்களுக்கு விளக்கினர்.

உரைவேறுபாட்டுக் களஞ்சிய ஆசிரியர்கள் பாலாஜி, லோகேஸ்வரன், முனிஸ் மூர்த்தி, பரமசிவம் ஆகியோர். (இடமிருந்து வலம்)

20 மார்ச் 2025 தமிழ்த்துறை ஒருங்கிணைத்த சொற்பொழிவில் எழுத்தாளர் மருதன் ‘வரலாற்றின் வரலாறு’ எனும் தலைப்பில் உரையாற்றினார். பழங்காலம் முதல் தற்காலம் வரையிலான வரலாறு எழுதும் முயற்சிகள், தொடர்ந்து, வரலாற்றெழுதியல் (Historiography) சார்ந்த சிக்கல்கள், பல்வேறு வரலாற்று வகைமைகள், பிராந்திய வரலாறுகளை எழுதுவதன் முக்கியத்துவம் முதலானவை தொடர்பானதாக அவரது உரை அமைந்தது.

திருமிகு ஆரோக்கிய புஷ்பராஜ்

08 ஏப்ரல் 2025 அன்று தமிழ்நாட்டு அரசின் நிதித்துறையில் இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளராகப் பணிபுரியும் திருமிகு ஆரோக்கிய புஷ்பராஜ் அவர்கள் ‘குடிமைப்பணித் தேர்வுநோக்கில் தமிழ்’ எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார். தமிழ்த்துறைப் பின்புலம் கொண்டோர் குடிமைப் பணித் தேர்வுகளில் எவ்வாறு எளிமையாகத் தேர்ச்சியடையலாம் என்பதை விளக்குவதாக அவரது உரை அமைந்தது.

முன்மாதிரியாக JNU தமிழ்த்துறை

திருமிகு நானி கோபால் மகந்தா அவர்களுக்குச் சிறப்புச் செய்தல்

தமிழக அரசு சிறப்புநிலைத் தமிழ்த்துறை அமைப்பதற்கு 5 கோடி நிதி வழங்கியிருந்தது. அதைத் தொடர்ந்து இந்திய மொழிகள் நாள் (15 டிசம்பர் 2022) விழாவில் அசாம் மாநிலக் கல்வி அமைச்சகத்தின் ஆலோசகர் நானி கோபால் மகந்தா கலந்துகொண்டு, ஜேஎன்யுவில் அசாமிய மொழி இருக்கை அமைப்பதற்கான நிதி வழங்க அசாம் அரசும் முன்வரும் என்று தெரிவித்தார்.

JNUவில் கன்னடத் துறை அமைப்பதற்கான ஆய்வை மேற்கொள்ள கருநாடக அரசின் ஆய்வுக்குழுவினர் 18 திசம்பர் 2024 அன்று பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தனர். அதன் ஒருபகுதியாக, சிறப்புநிலைத் தமிழ்த்துறையைப் பார்வையிட்ட அவர்கள் அதன் செயல்பாடுகளைப் பாராட்டிச் சென்றனர்.

தமிழ்த்துறையில் கருநாடக அரசின் ஆய்வுக்குழுவினர்

புத்தக வெளியீடுகளும் ஆய்வாளர்களின் செயல்பாடுகளும்

ரஷ்ய தமிழ் அறிஞர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கி எழுதிய ‘பண்டைய தமிழ்க் கவிதைகளின் சடங்கியல் தொன்மவியல் மூலங்கள்’ என்ற நூலைத் தமிழ்த்துறை ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் மொழிபெயர்த்திருந்தார். அதனை மாண்பமை துணைவேந்தர் அவர்கள் வெளியிட அறிஞர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கியின் மகள் முனைவர் டாட்டியான துபியான்ஸ்கியா பெற்றுக்கொண்டார்.

2023 புதுதில்லி உலக புத்தகக் கண்காட்சியில் பேராசிரியர் இரா. அறவேந்தனுடன் சேர்ந்து சிறப்புநிலைத் தமிழ்த்துறை பதிப்பித்த புத்தகங்களை ஆய்வாளர்கள் வெளியிட்டனர்.

JNUவின் தமிழ்த்துறை ஆய்வாளர் த.க. தமிழ்பாரதன், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, வெனிஸ் பயணத்தின்போது ஓலைச்சுவடியைக் கண்டுபிடித்தது குறித்து விளக்கினார். சில மாதங்களுக்குப் பிறகு, அவர் புதுச்சேரியின் பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத்தில் திருமிகு மார்கெரிட்டா ட்ரெண்டோவைச் சந்தித்து, அவர் பதிப்பிக்கும் நூலான ஞானமுயற்சியின் அட்டைப்படத்தை வெளியிட்டார்.

JNUவின் சிறப்புநிலைத் தமிழ்த்துறையில் முனைவர் பட்ட ஆய்வாளர் த.க. தமிழ் பாரதன், அவரது கிரேக்கப் பயணத்தின்போது அளித்த நேர்காணல், ஏப்ரல் 14, 2024 அன்று கிரேக்க இதழ்களில் வெளிவந்தது.



தமிழ்த்துறை ஆய்வாளர் கா. விக்னேஷ் எழுதிய நூறும் சதகமும்: தமிழ் – சமஸ்கிருதச் செவ்விலக்கிய ஒப்பாய்வு எனும் நூலை அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழகத் தமிழ்ப்பிரிவு உதவிப் பேராசிரியர் இரா. தமிழ்ச்செல்வன் புதுதில்லி உலகப் புத்தகக் கண்காட்சியில் (2024) வெளியிட்டார்.

❄

தமிழ்த்துறை ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் தமிழில் மொழிபெயர்த்திருந்த அமெரிக்கத் தமிழறிஞர் பேரா. ஜார்ஜ் ஹார்ட் அவர்களின் 'தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும்' நூலுக்கு, சிறந்த மொழிபெயர்ப்பிற்கான மூன்றாம் பரிசை அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம் அறிவித்தது. 02 அக்டோபர் 2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், அம்மையத்தின் இயக்குநர் திரு. சிற்பி அவர்களிடமிருந்து ஆய்வாளர் அப்பரிசைப் பெற்றுக் கொண்டார்.

ஆய்வாளர் கமலக்கண்ணன் விருது பெறுதல்

தமிழ்த்தடம் ஆய்விதழ் அறிஞர் பா. ரா. சுப்பிரமணியன் அவர்களின் பெயரில் இளம் ஆய்வறிஞர் விருதை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. 2024ஆம் ஆண்டுக்கான விருது ஜேஎன்யு தமிழ்த்துறை மேனாள் ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. 15 மார்ச் 2025 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்வில் அவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

❄

31 சனவரி 2025 அன்று, முன்னணித் தமிழ் ஊடகவியலாளர் திருமிகு சமஸ் அவர்கள் சிறப்புநிலைத் தமிழ்த்துறைக்கு வருகை தந்தார்.

❄

13.03.24 அன்று எழுத்தாளர் இமையமும் அவரது மொழி பெயர்ப்பாளர்களும் கலந்துகொண்ட நிகழ்வில் அவரது நெஞ்சறுப்பு நாவல் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர் இமையத்தின் நூல் வெளியீடு

24 மார்ச் 2025 அன்று புதுதில்லியிலுள்ள கிரேக்கத் தூதரகத்தில் நடைபெற்ற கவிமாலை நிகழ்ச்சியில் ஜேஎன்யு தமிழ்த்துறை ஆய்வாளர் த.க.தமிழ்பாரதன் பங்கேற்று, கிரேக்கக் கவிஞரான நிகோஸ் கவாடியாஸின் ஃபட்டாமோர் கானா கவிதையைத் தமிழில் மொழிபெயர்த்து வாசித்தார்.

சென்னையில் 2024 செப்டம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் கமல் பண்பாட்டு மையம் மூத்த மொழிபெயர்ப்பாளர் ஜி. குப்புசாமியைப் பயிற்றுநராகக் கொண்ட மொழிபெயர்ப்புப் பயிற்சி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் சிறப்புநிலைத் தமிழ்த்துறை ஆய்வாளர் இ. சு. அஜய்சுந்தர் கலந்துகொண்டு மொழிபெயர்ப்புப் பயிற்சி பெற்றார்.



04 ஜனவரி 2024 அன்று திருச்சி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிகழ்த்திய 'இமையத்தின் புனைவுலகம்' எனும் தலைப்பிலான தேசிய கருத்தரங்கில் தமிழ்த்துறை ஆய்வாளர்கள் மு. தீபன், கா. விக்னேஷ் ஆகியோர் தமது கட்டுரைகளைப் பணித்தனர்.

மைசூரில் அமைந்துள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் 12 சூன் 2024 அன்று நிகழ்த்திய கருத்தரங்கில் தமிழ்த்துறை ஆய்வாளர்கள் அ. வெற்றிச்செல்வி, அ. பிரபு ஆகியோர் கட்டுரை பணித்தனர்.

14 நவம்பர் 2024 அன்று அலீகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் துறை நிகழ்த்திய 'தற்கால ஒப்பிலக்கிய போக்குகள்' எனும் தலைப்பிலான தேசியக் கருத்தரங்கில் தமிழ்த்துறையின் ஆறு ஆய்வாளர்கள் பங்கேற்றுத் தமது கட்டுரைகளைப் பணித்தனர்.

07 – 08 ஜனவரி 2025 ஆகிய இருநாட்கள் திருச்சியில் அமைந்துள்ள தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பெருமாள் முருகனின் படைப்புலகம் எனும் தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் தமிழ்த்துறை ஆய்வாளர்கள் செ.இர. வினிதா, கா. விக்னேஷ், மு.தீபன் ஆகியோர் கலந்துகொண்டு தம்தம் கட்டுரைகளைப் பணித்தனர். இக்கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட அனைத்துக் கட்டுரைகளையும் செப்பமாக்கும் விதத்தில் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட கா. விக்னேஷ், மு. தீபன் ஆகியோருக்கு நூல்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன.

16–17 ஜனவரி 2025 அன்று ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தின் மொழிகள் புலம் ஒருங்கிணைத்த பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறை மாணவர்கள் வ. ஏ. மணிகண்டன், ஆ. பிரகலாதன், மு. தீபன் ஆகியோர் பங்கேற்றுத் தமது ஆங்கிலக் கட்டுரைகளைப் பணித்தனர்.

செவ்வியல் தமிழும் பிற மொழிகளும் எனும் ஒப்பிலக்கியக் கட்டுரைகள் அடங்கிய நூலை ஆய்வாளர் தமிழ்பாரதன் பதிப்பித்திருந்தார். Introduction to Indian Textual Criticism *எனும்* SM Katre *வின் நூலைத் தமிழ்த்துறை ஆய்வாளர் அஜய்சுந்தர் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். ஜேஎன்யு நிருவாகக் கட்டடத்தில் 05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் தமிழ்த்துறை ஆய்வாளர்களின் மேற்குறிப்பிட்ட நூல்கள் வெளியிடப்பட்டன. மாண்பமை துணைவேந்தர் பேரா. சாந்திஸ்ரீ டி பண்டிட் நூல்களை வெளியிடத் தமிழ்நாடு அரசின் தில்லி உள்ளுறை ஆணையர் திருமிகு ஆஷிஷ் குமார் பெற்றுக்கொண்டார்.*

தமிழைப் பெருமைப்படுத்துவோம் – பிரதமர்

“நண்பர்களே, இந்தியா இன்று ‘பாஞ்ச் பிரான்’ (ஐந்து உறுதிப்பாடுகள்) மூலம் நமது பாரம்பரியத்தில் பெருமைப்படுவதை முன்வைத்துள்ளது. உலகில் எந்த நாட்டில் பழமையான பாரம்பரியம் இருக்கிறதோ, அந்த நாடு அதில் பெருமை கொள்கிறது. அதைப் பெருமையுடன் உலகுக்குப் பரப்புகிறது. எகிப்தின் பிரமிடுகள் முதல் இத்தாலியில் உள்ள கொலோசியம் மற்றும் பைசாவின் சாய்ந்த கோபுரம் என இதுபோன்ற பல உதாரணங்களை நாம் காணமுடியும். உலகின் பழமையான மொழியான தமிழ் நம்மிடம் உள்ளது என்பதை உலக மக்கள் அறிந்ததும், வியப்படைகிறார்கள். ஆனால், அதைப் பெருமைப்படுத்துவதில் நாம் பின்தங்கியுள்ளோம். இந்தத் தமிழ்ப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன் செழுமைப்படுத்துவதும் 130 கோடி நாட்டு மக்களின் பொறுப்பாகும். தமிழைப் புறக்கணித்தால், தேசத்திற்குப் பெரும் கேடு விளைவிப்பவர்களாக ஆகிவிடுவோம். தமிழைக் கட்டுப்பாடுகளுக்குள் நாம் வைத்தால், அதற்குப் பெரும் கேடு விளைவிப்பதாக அமையும். மொழி வேறுபாடுகளை அகற்றி ஒற்றுமை உணர்வை நிலைநாட்டுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்”

– மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி (காசி தமிழ்ச் சங்கம், 2022)

2025ஆம் ஆண்டு காசியில் நடைபெற்ற மூன்றாவது தமிழ்ச் சங்கமத்தில் தமிழ்த்துறையின் முதுகலை மாணவர்கள் மூவரும் முனைவர்பட்ட ஆய்வாளர்கள் மூவரும் கலந்து கொண்டனர்.

JNUவில் திருவள்ளுவர்க்குச் சிலை

தமிழக அரசின் 2024–2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் 16 ஏப்ரல் 2025 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது JNU வளாகத்தில் உலோகத்தாலான திருவள்ளுவர் சிலை ஒன்று நிறுவ ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பன்னோக்குக் கலையரங்கத்தின் அருகில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் விரைவில் இச்சிலை நிறுவப்படவுள்ளது.

அண்மைக்காலப் பணி வாய்ப்புகள்

JNUவில் தமிழாய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் தொடர்ச்சியாக உலகின் பல்வேறு முன்னணி நிறுவனங்களில் பணிவாய்ப்புப் பெற்று வருகின்றனர். அதன்பகுதியாக, கடந்த கல்வியாண்டில் இரு ஆய்வாளர்கள் பணிவாய்ப்புப் பெற்றுள்ளனர். திரு. த.க. தமிழ்பாரதன் ஒன்றிய குடிமைப் பணிகள் தேர்வாணையம் (UPSC) நடத்திய நேர்காணலில் தேர்ச்சிபெற்று அந்தமானில் உள்ள ஜவகர்லால்நேரு ராஜ்கீய மகாவித்யாலயா எனும் அரசுக் கல்லூரிக்கு உதவிப் பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மற்றொரு ஆய்வாளர் திரு. பு. கமலக்கண்ணன், சென்னையில் அமைந்துள்ள எஸ்ஆர்எம் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைக்கு உதவிப் பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆய்வாளர்களின் நூல் வெளியீடு



Tolkappiyam Hindi Translation:

This book, the Hindi version of the first grammar of Tamil "Tolkappiyam" is one of the significant contributions of JNU Tamil Stream. JNU Tamil stream's former Professors H.Balasubramaniyam and K. Nachimuthu have translated this work.

Transeed:

This book titled "Transeed" is the proceedings of the Tholkappiyam symposium. This includes 22 papers which are presented by the scholars in the sessions. Soon, it is going to get published through CICT.





தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும்

பேரா. ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்களின் The Poems of Ancient Tamil: Their Milieu and their Sanskrit Counterparts எனும் நூலைப் பேரா. ஹார்ட் அவர்களின் ஒப்புதலோடு தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ், சமஸ்கிருதச் செவ்விலக்கிய உறவுகள்

பேரா. ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்களின் The Relation between Tamil and Classical Sanskrit Literature எனும் நூலைத் தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு நூல் இந்து தமிழ் நாளிதழ் வெளியிட்ட 2022 ஆம் ஆண்டில் கவனம்பெற்ற நூல்கள் பட்டியலில் இடம்பெற்றது.



தமிழியலுக்கு ரவிக்குமாரின் பங்களிப்பு

எழுத்தாளரும், மணற்கேணி ஆய்விதழின் ஆசிரியருமான முனைவர் துரை. ரவிக்குமார் அவர்களின் தமிழாய்வுப் பங்களிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் எழுதியுள்ள ஆறு ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகிறது. இக்கட்டுரைகள் ரவிக்குமாரின் முனைவர்பட்ட ஆய்வு, ஈழத்து அரசியல் இலக்கியம் முதலிய பொருண்மைகளை உள்ளடக்கியனவாக அமைகின்றன.

அகப்பொருளும் சமஸ்கிருத முக்தகப் பாடல்களும்

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பேரா. ஸிக்பிரிட் லீன்ஹார்டு (Siegfried Lienhard 1924- 2011) என்பவர் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தின் "இந்தியவியல்" பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ் அக இலக்கியங்களின் தாக்கத்தைச் சமஸ்கிருத முக்தகப் பாடல்களில் காண முடிகிறது. எனவே, இப்பாடல்கள் திராவிட இலக்கிய மரபை அடிப்படையாய்க் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கலாம் எனும் கருத்தை இந்நூல் முன் வைக்கிறது. இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகளைத் தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் தொகுத்துத் தமிழாக்கம் செய்துள்ளார்.



பிரஞ்சு தேவதைக் கதைகள்

பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் சார்லஸ் பெரால்ட் (Charles Perrault 1628 - 1703) ஆவார். இவரே Fairy tales (தமிழில், தேவதைக் கதைகள்) எனப்படும் இலக்கிய வகைமையை (Literary genre) முதன்முதலாக உருவாக்குகிறார். சார்லஸ் பெரால்ட் எழுதிய Blue beard எனும் கதை உட்படப் பத்துக் கதைகளின் தமிழாக்கமாக நீலத்தாடிக்காரன் எனும் தலைப்பிலான இந்நூல் அமைகிறது. இக்கதைகளை ஆங்கில வழித் தமிழாக்கம் செய்துள்ளார், தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர் நரேஷ் வேல்சாமி.

எனது இலங்கைச் செலவு

தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர் த.க. தமிழ்பாரதன் தனது இலங்கைப் பயணம் குறித்து எழுதியுள்ள பயண நூலாக இந்நூல் அமைகிறது. உலகளவில் கவனத்தைப் பெற்ற, மலேசிய ஊடகம் நடத்திய பேசு தமிழா பேசு எனும் தலைப்பிலான போட்டி 2017 ஆம் ஆண்டு இலங்கைத் தலைநகர் கொழும்புவில் நடைபெற்றது. இப்போட்டியில் த.க.தமிழ்பாரதன் இந்தியப் பிரதிநிதியாகப் பங்கேற்று இரண்டாம்நிலை வெற்றி பெற்றார். அப்போதைய இலங்கைப் பயண அனுபவங்களை இந்நூலில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

நெறியாளர்

பேரா. எச். பாலசுப்பிரமணியம் (1932 – 2021) அவர்கள் ஜேஎன்யு தமிழ்ப்பிரிவின் வருகைதரு பேராசிரியராக விளங்கினார். அன்னாரின் மறைவையொட்டி, ஜேஎன்யு தமிழ்ப்பிரிவு ஆய்வாளர்கள், பேராசிரியர் தங்களின் ஆய்விற்கு உதவிய பாங்கினை இந்நூலில் பதிவு செய்துள்ளனர்.

அறிவியல் தமிழ்த் தாத்தா

பேரா. இராம. சுந்தரம் (1938 – 2021) அவர்களின் தமிழாய்வுப் பங்களிப்புகளை விளக்குவதாக இந்நூல் அமைகிறது. இவர் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கக் காரணமாக இருந்துள்ளார். பத்துப்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து Glossematics எனும் கொள்கைவழி தன் ஆய்வை நிறைவு செய்த பெருமைக்குரியவர்.



ஒப்பியல் பார்வையில் தமிழ்ச் செவ்வியல்

ஜேஎன்யு தமிழ்ப்பிரிவு செப்டம்பர் 2021இல், கோவிட் – 19 பெருந்தொற்றுக் காலத்தில் இணையவழியில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றை நிகழ்த்தியது. இக்கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற 13 கட்டுரைகளின் தொகுப்பாக்கமாக இந்நூல் அமைகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம், சிங்களம் உள்ளிட்ட மொழி இலக்கிய இலக்கணங்களுக்கு இடையேயான உறவுகளை வெளிப்படுத்துவனவாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

தமிழின் மீது தூரத்துப் பார்வை

பேரா. இ. அண்ணாமலை தமிழ் இலக்கியத்திலும் மொழியியல் துறையிலும் புலமை பெற்ற மூத்த அறிஞர். அமெரிக்காவிலுள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிப் பணிநிறைவு செய்துள்ளார். பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். இந்நூலின் வழி, பேரா. அண்ணாமலையின் தமிழியல் பங்களிப்பையும் அவர்தம் பார்வையையும் புரிந்துகொள்ள இயலும்.



முறைமை

ஜேஎன்யுவில் தமிழாய்வு துவங்கியதிலிருந்து 2023ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

சு.இராசாராம் எனும் மீ இலக்கணர்

பேரா. சு. இராசாராம் அவர்களின் பன்முக ஆளுமையினை வெளிப்படுத்தும் விதமாக மொழிக் கற்பித்தல், இலக்கணம், மொழியியல், பதிப்புப்பணி, அயல்நாட்டுத் தமிழ்ப்பணி முதலானவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் விவரிக்கும் வகையில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.



அரிஸ்டாட்டிலின் இயற்பியல் கருத்துநிலைத் தமிழாக்கம்

கிரேக்கத்தைச் சேர்ந்த செவ்வியல் மெய்யியலாளர் அரிஸ்டாட்டில். இயற்கையியல் சார்ந்த அவர்தம் கருத்துகள் 'பிசிக்கே' எனும் பெயரில் கிரேக்கத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. மாற்றம், முடிவிலி, இடம், வெற்றிடம், காலம் குறித்த கருத்துகள் இப்பனுவலில் உள்ளன. த.க.தமிழ்பாரதன் – க.ஜெயபாரதி இணைந்து, கருத்துநிலையில் (ஆங்கிலம்வழி) தமிழாக்கம் செய்த இந்நூல் 2023 சூலையில் இத்தாலியின் வெனீசு நகரத்தில் வெளியிடப்பெற்றது.

திணைக்கொள்கை உருவாக்கமும் சடங்கியல் தொன்மவியல் மூலங்களும்



இந்நூல் ரஷ்யத் தமிழ்ப் பேராசிரியர் அலெக்சாந்தர் எம். துபியான்ஸ்கி (1941 – 2020) அவர்கள் எழுதிய Ritual and Mythological Sources of Early Tamil Poetry எனும் நூலின் தமிழாக்கம் ஆகும். பேரா. துபியான்ஸ்கி 1960களின் பிற்பகுதியில் தமிழ் கற்று, 'முல்லைத்திணைப் பாடல்கள்' தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு முனைவர்பட்டம் பெற்றுள்ளார். இந்நூல் அவ்வாய்வின் விரிவாக்கப்பட்ட வடிவம் ஆகும். இந்நூலில், தமிழ் அகப்பாடல்களின் தனித்தன்மையாய் விளங்கும் 'திணைக்கொள்கை' உருவாக்கத்திற்கான தோற்றம் குறித்து ஆராய முற்பட்டுள்ளார். இத்திணைக்கொள்கை உருவாக்கப் பின்னணியில் சடங்கியல், தொன்மவியல் கூறுகள் அமைந்திருக்கலாம் என்பது இவர் இந்நூலில் முன்வைக்கும் கருத்தாக அமைகிறது. 1989ஆம் ஆண்டு ரஷ்ய மொழியில் வெளிவந்த இந்நூல், 2000 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தற்போது, ஜேஎன்யு தமிழ்த்துறையின் முனைவர்பட்ட ஆய்வாளர் பு. கமலக்கண்ணன் இந்நூலை ஆங்கிலவழித் தமிழாக்கம் செய்துள்ளார்.



நூறும் சதகமும்: தமிழ்-சமஸ்கிருதச் செவ்விலக்கிய ஒப்பாய்வு

இந்நூல் தமிழில் ஐங்குறுநூறையும் சமஸ்கிருதத்தில் பர்த்ருஹரியின் சிருங்கார சதகத்தையும் ஒப்பிட்டு ஆராய்கிறது. குறிப்பாகத் திணை, கூற்று, உவமை, பெயர் சுட்டா மரபு உள்ளிட்ட தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையிலும் பனுவலாக்க அடிப்படையிலும் இவ்விரு இலக்கியங்களையும் ஒப்பிட்டு விளக்குகிறது. இதன்வழி இருமொழி இலக்கியங்களுக்குமான இணைவையும் வேறுபாட்டையும் கண்டடைந்துள்ளது. இவ்வாய்வுநூலை ஜேஎன்யு தமிழ்த்துறையின் முனைவர்பட்ட ஆய்வாளர் கா. விக்னேஷ் எழுதியுள்ளார்.

ஈழத்து மின்னல்கள்

இலங்கையைச் சார்ந்த பேராசிரியர்கள் அருணாசலம் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் தமிழியல் பங்களிப்பை இந்நூல் எடுத்துரைக்கிறது. தமிழ்–ஜப்பானிய ஒப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு தமிழியல் களங்களில் அமைந்துள்ள அவர்களின் ஆய்வுகளின் சிறப்பை எடுத்துரைப்பதோடு அவற்றிலிருந்து தமிழ் ஆய்வுலகம் கைக்கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும் முன்வைப்பதாக இந்நூல் அமைகிறது. சிறப்புநிலைத் தமிழ்த்துறை ஒருங்கிணைத்த இணையவழி உரையமர்வில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளை உள்ளடக்கியதாக இது அமைகிறது.

இந்தியவியல் முன்னோடி

பேரா. பரோ அவர்களின் மேற்பார்வையில் ஆய்வுமேற்கொண்ட விஜயலட்சுமி அவர்களின் தமிழியல் பங்களிப்பை அறிமுகப்படுத்துவதாக இந்நூல் அமைகிறது. சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் பெற்றவை உரக்கப் பேசப்பட்டுத் தமிழிலிருந்து சம்ஸ்கிருதம் பெற்றவை மறக்கடிக்கப்படும் சூழலில் தமிழ் – சம்ஸ்கிருத உறவு இருவழியானது என்பதைப் பல்வேறு சான்றுகளைக் கொண்டு நிறுவியுள்ள பேராசிரியரின் பல்வேறு நூல்களைக் குறித்துப் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஆய்வாளர்கள் வழங்கிய கட்டுரைகளை உள்ளடக்கியது இந்நூல். அவரிடம் தமிழ் பயின்ற அயல்நாட்டு ஆய்வாளர்களும் இதில் ஆங்கிலத்தில் கட்டுரைகளை அளித்துள்ளனர்.

கோட்பாடு திறனாய்வு திறனாய்வாளர்



எழுத்தாளர், திறனாய்வாளர், ஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர் என்று பன்முக ஆற்றல் கொண்ட பேரா. தமிழவனின் தமிழியல் பங்களிப்புகளை வெளிப்படுத்தும் விதமாக அமைகிறது இந்நூல். அமைப்பியல், குறியியல் உள்ளிட்ட கோட்பாடுகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்த முன்னோடியாகத் திகழும் தமிழவனின் அளப்பரிய பங்களிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்த்தப்பட்ட மூன்றுநாள் இணையவழிக் கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். பத்துக் கட்டுரையாளர்களைக் கொண்டு வெவ்வேறு பொருண்மைகளில் தமிழவனின் திறத்தை வெளிக்கொணர்ந்துள்ள இந்நூல், தமிழுக்கு என்ன செய்தார் தமிழவன் என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ள ஒரு கையேடாக அமைந்துள்ளது.

‘செவ்வியல்’ தமிழும் பிற மொழிகளும்

ஜேஎன்யு தமிழ்ப் பிரிவு ‘ஒப்பீட்டு நோக்கில் செவ்வியல் மொழிகள் இலக்கியங்கள் பண்பாடு’ எனும் பொருண்மையில் கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் ஒருங்கிணைத்த இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கில் பன்னாட்டுக் கல்வி நிறுவனங்களில் பயின்று, பயிற்றுவித்துத் தமிழாய்வில் கரைகண்ட மூத்த ஆய்வறிஞர்கள் பங்கேற்றுக் கட்டுரை வாசித்தனர். தமிழ்ச்செவ்வியல் கூறுகளைத் திராவிட மொழிகள், வடமொழி, ஜப்பானியம் முதலிய பிறமொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட அக்கட்டுரைகளின் தொகுப்பாக்கமே இந்நூல். இஃது ஒப்பீட்டாராய்ச்சியில் மொழி, இலக்கியம், பண்பாடு என நிலைகளில் முதன்மை பெறுகிறது.

இந்திய மூலபாடத் திறனாய்வு – ஓர் அறிமுகம்



இந்திய மூலபாடத் திறனாய்வு – ஓர் அறிமுகம் எனும் பெயரில் அமைந்துள்ள இந்நூல், இந்தியாவில் எழுத்தின் தோற்றம் குறித்தும் சுவடிமரபு குறித்தும் விரிவாக விவாதிக்கிறது. பொதுவாக, ஒரு பனுவலில் காணப்படும் பலவகைப்பட்ட பிழைகளையும் அவை தோன்றும் வழிகளையும் எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்கிறது. பாடத்தெரிவு, பாடத்திருத்தம் ஆகிய மூலபாடத் திறனாய்வுச் செயல்முறைகளை விளக்குவதுடன் இந்நூல் வழக்கமாகப் பின்பற்றப்படும் சில மரபுநெறிகளையும் அவற்றிலுள்ள வெவ்வேறு சிந்தனைப்பள்ளிகளையும் கவனப்படுத்துகிறது. மேலும், ஒரு சுவடியைப் பதிப்பிக்கும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் விளக்குகிறது. இவ்வகையில், தமிழில் மேற்கொள்ளப்படவேண்டிய பதிப்பியல் செயல்பாடுகளுக்கு உதவுவதாக இந்நூல் அமைகிறது. எஸ்.எம். கத்ரே எனும் அறிஞரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இந்நூலைத் தமிழ்த்துறை ஆய்வாளர் இ.சு.அஜய்சுந்தர் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.

Publication

Publications: https://jnuscts.blogspot.com/2023/12/publications.html

PhD Thesis : https://jnuscts.blogspot.com/2023/12/phd.html

M.Phil. Dissertations : https://jnuscts.blogspot.com/2023/12/mphil.html

Articles : https://jnuscts.blogspot.com/2023/12/articles.html

Book Reviews : https://jnuscts.blogspot.com/2023/12/bookreviews.html

தமிழுக்கு ஜேஎன்யு ஆய்வாளர்கள்

- தலித் கவிதைகள் (இந்தி)
- காதந்திரம் (சமஸ்கிருத இலக்கணம்)
- காவ்யப்பிரகாசம் (சமஸ்கிருத அணிநூல்)
- காவ்யாலங்காரம் (சமஸ்கிருத அணிநூல்)
- நீதி த்வி ஷஷ்டிகா (சமஸ்கிருத அற இலக்கியம்)
- சிருங்கார சதகம் (சமஸ்கிருதம்)
- கச்சாயனம் (பாலி இலக்கணம்)
- நாட்டுப்புறக் கதைகள் (ஒராவ்ன்)
- இசுமத்சுக்தாய் சிறுகதைகள் (உருது)
- எச். நாகவேணி சிறுகதைகள் (கன்னடம்)
- லெ ஷான்ஸோன் த ஜெஸ்த் (பிரெஞ்சு வீரநிலைக் கவிதை)
- தேவதைக் கதைகள் (பிரெஞ்சு)
- மொக்கல்லானம் – சொல் (பாலி இலக்கணம்)
- முக்தாவளி (தெலுங்கு அற இலக்கியம்)
- அரிஸ்டாட்டிலின் இயற்பியல் (கிரேக்கம்)
- அரிஸ்டாட்டிலின் மொழியிய வகைப்பாடு (கிரேக்கம்)
- அத்ருஷ்ட் (யார் அறிவாரோ) (கொங்கணிக் குறும்புதினம்)
- மோகன் ராகேஷ் நாடகங்கள் (இந்தி)
- தமிழ் – சமஸ்கிருத நிகண்டு உறவு (சமஸ்கிருத ஒப்பீடு)
- பிரேம்சந்த் சிறுகதைகள் (கதையாடலும் கதைக்கருக்களும்) (இந்தி)
- சரியகீத்தி (ஒடியச் செவ்விலக்கியம்)
- தொல்காப்பிய மலையாள மொழிபெயர்ப்புகள் (மலையாளம்)
- மலையாளபாஷா தொல்காப்பியத்தில் (மலையாளம்)
- அல்கிதாப் (அரபு இலக்கணம்)
- தமிழ் சமஸ்கிருதச் செவ்விலக்கிய உறவுகள் (ஆங்கிலம்)
- தமிழ்ச் செவ்விலக்கியங்கள் அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் (ஆங்கிலம்)
- லியன் ஹார்டு ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு (ஆங்கிலம்)
- திணைக்கொள்கை உருவாக்கமும் சடங்கியல் தொன்மவியல் மூலங்களும் (ரஷ்யமொழி)
- நூறும் சதகமும் (சமஸ்கிருத ஒப்பீடு)
- இந்திய மூலபாடத் திறனாய்வு (ஆங்கிலம்)

To visit the Facebook Page of SCTS :

To watch the recorded videos of all the events organised by SCTS:

ஆல்போல் தழைக்கட்டும்

உலக அளவில் தொன்மையான செம்மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழி இன்றளவும் பொதுமக்களின், அறிவுத்துறையினரின் பயன்பாட்டில் உள்ளது. தொல்காப்பியம் தமிழின் மூத்த இலக்கணமாக அறியப்படுகிறது. சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், பிரபந்த இலக்கியம், நவீன இலக்கியம் என 3000 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியான இலக்கிய மரபைத் தமிழ்மொழி கொண்டுள்ளது. இத்தகு தமிழின் இலக்கண, இலக்கிய, பண்பாட்டுக் கலை வரலாற்றை ஆய்வுக்கு உட்படுத்திக் கண்டடையும் பண்பாட்டு விழுமியங்கள்வழி (Cultural Values) வருங்காலச் சமூகத்தை மேம்படுத்த இயலும். அவ்வகையில், புதுதில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கென மொழி, இலக்கியப் பண்பாட்டுப் புலத்தின் இந்திய மொழிகள் மையத்தில் 2000ஆம் ஆண்டு தமிழ் ஆய்வு இருக்கையை (Tamil Chair) உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, 2007ஆம் ஆண்டு முறைப்படித் தொடங்கப்பட்டு, 2008ஆம் ஆண்டு ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்ட ஆய்வுகளுடன் தமிழ்ப்பிரிவாக (Tamil Stream) வளர்ச்சி அடைந்தது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமிகு நரேந்திர மோடி அவர்கள் தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை உலக அரங்கில் எடுத்துரைத்து வரும் சூழலில், இந்தியத் திருநாட்டின் தலைநகரில் தனித்தன்மையுடன் இயங்கும் JNU–இல் சிறப்புநிலைத் தமிழ்த்துறை (Special Centre for Tamil Studies) தொடங்கப்பெற்றது. இதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திருமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் நிதியுதவி அளித்து உதவியுள்ளார்கள். மேலும், JNU வளாகத்தில் உலோகத்தாலான வான்புகழ் வள்ளுவரின் சிலையை நிறுவுவதற்கு ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். JNU துணைவேந்தராகத் தமிழ்த் துறையின் முயற்சிகளையும் செயல்பாடுகளையும் நன்கு அறிவேன். அவற்றை ஆவணப்படுத்தும் வகையில், இந்தச் செய்தி இதழைக் கொண்டு வந்துள்ளனர். இது மேன்மேலும் சிறக்க, சிறப்புநிலைத் தமிழ்த் துறையின் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த வாழ்த்துகள்.

– பேரா. சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட்
துணைவேந்தர், JNU

05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் துணைவேந்தர் மற்றும் சிறப்பு விருந்தினருடன் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் நூலாசிரியர்களும்

05 மே 2025 அன்று நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் மாண்பமை துணைவேந்தர் பேரா. சாந்திஸ்ரீ டி பண்டிட் நூல்களை வெளியிடத் தமிழ்நாடு அரசின் தில்லி உள்ளுறை ஆணையர் திருமிகு ஆஷிஷ் குமார் பெற்றுக்கொண்டார். அந்நிகழ்வில் தமிழ்த்துறையின் செய்திமடலான குரிசிலின் இரண்டாம் இதழ் வெளியிடப்பட்டது.